உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவம்.

மலர் 5. | சித்தார்த்தி ௵-மார்கழி௴ --1919௵-டிசம்பர்௴ | இதழ் 12.

## விநாயகர் வணக்கம்.

வீதி வேழமா வுலாவுமா வினன்குடி வேத
மோதி வேழமா மூலமென் றுரைத்தவன் போற்று
மாதி வேழமா தொருபிடி யாகவந் துதித்த
சோதி வேழமா முகவனைத் துதித்திடல் செய்வாம்.

(இ-ள்.) வேதங்களை அத்தியயனஞ் செய்கின்ற பிரமனும், கயேந்திரன் என்னும் யானை ஆதிமூலமே யென்று போற்றிய விட்டுணுவும் துதிக்கின்ற முதற்பொருளாகிய சிவபெருமான் ஆண்யானையாகவும், உமாதேவியார் ஒரு பெண்யானை யாகவுஞ் சகளீகரிக்கத் திருவவதாரஞ் செய்தருளிய, தெருக்கடோறும் யானைகளுங் குதிரைகளும் உலாவாநிற்கும் பழநித் தலத்தின்கண் எழுந்தருளி யிருக்கும் ஒளிவடிவராகிய யானைமுக விநாயகக் கடவுளைத் துதிப்பாம்.

இந்திரத் தியும்நன் என்னும் அரசன் அகத்தியரது சாபத்தினாலே யானையாகிக் காட்டிற் றிரிந்து நின்றான். தேவல முனிவர் சாபத்தினாலே ஆகா என்னுங் கந்தருவன் முதலையாகித் தடாகத்தில் இருந்தான். அப்போது கயேந்திரன் என்னும் யானை தன் பிடிகளோடுந் தடாகத்திற் சென்று நீராடி நின்றது. முதலை வந்து கௌவ உய்யும்வழி தெரியாது வருந்திய யானை, இனிப் பரம்பொருளே யெனக்குத் துணை யென்னும் நல்லுணர்வு தோன்ற, 'ஆதிமூலமே ஆதிமூலமே' என்று கூப்பிட்டது. அப்போது அநாதிமூலமாகிய சிவபெருமானது ஆஞ்ஞையானே காத்தற் றொழில் செய்யும் திருமால் வந்து சக்கரத்தால் முதலைவாயைப் பிளந்து யானையைக் காத்தனர் என்பது புராண சரிதம். ஆதலால் "வேழமா மூலமென் றுரைத்தவன்" என்றார்.

வேதமோதி - பிரமன். பிறைசூடி, வீணை தடவி என்றாற் போல நின்றது. வேழம்=ஆண்யானை. பிடி=பெண்யானை. அது "வேழக்குரித்தே விதந்துகளி றென்றல்" எனவும், "பிடியென் பெண்பெயர் யானை மேற்றே" எனவும் வரூஉந் தொல்காப்பிய விதியா னுணர்க. ஆதி=சிவன்.

சிவபெருமான் பரப்பிரணவம் ஆகவும், உமாதேவியார் அபரப் பிரணவமாகவும் இருக்கின்றார் என்னும் வேதத் துணிபுபற்றி, அப் பிரணவங்களாகிய யானைகளை ஆதியாகவும் உமையாகவும் கூறினர். பிள்ளையாரது திருவவதாரங்களையும் பேதங்களையும் கந்தபுராணம், பார்க்கவபுராணம் என்பவற்றிற் பரக்கக் காண்க.

---

## சிவஞானபோதம்.

---

### எட்டாஞ்சூத்திரம்—மூன்றாமதிகரணம்.

(190-வது பக்கத் தொடர்ச்சி.)

ஐம்புலவேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனை.

(இ-ள்.) (முதல்வன் குருவடிவங்கொண்டெழுந்தருளி அரச குமாரனாகிய நீ) ஐம்பொறிகளாகிய வேடரோடு கூடியிருந்து வளர்ந்ததனால் நின் பெருமையறியாது மயங்கி இடர்ப்பட்டாய். (நின் பெருமை இத்தன்மைத்து) என்று உணர்த்த (உயிர் உணரும்.)

இதில் 1-வது—தன்னாற் கூறப்படும்பொருள்—உயிர் பஞ்சேந்திரியங்களைப் பற்றுதலினாலே தன்னையும் அறியமாட்டாது.

2-வது.—ஐயப்பாடு— பஞ்சேந்திரியங்கள் தத்துவ ஞானத்தை மறைக்குமோ, விளக்குமோ—

3-வது—பிறர்கூறும்பக்கம்— மெய் வாய் கண் மூக்குச் செவி என்னும் ஐம்பொறிகள் பசுகரணங்களாக நின்று உலகப்பொருள்களை அறியும் அறிவை விளக்குவதுபோல், சிவகரணமாய் நின்று தத்துவஞானத்தை விளக்குதலுங்கூடும். ஆதலால் தத்துவஞானத்தை விளக்குதற்கு முதல்வன் குருவுமாய் வருதல் வேண்டாம். (இவ்வாறு கூறுவோர் சிவசங்கிராந்தவாதிகள்.)

4-வது—மறுத்துரைக்குஞ் சித்தாந்தத்துணிபு—ஐம்பொறிகள் அறிவை விளக்குமாயினும், அவற்றால் விளக்கப்படுவது விடய விளக்கமேயன்றி ஆன்மாவின் உண்மை விளக்கமன்று. அன்றியும் ஒவ்வொரு இந்திரியமும் ஒவ்வொரு விடபத்தையே யுணர்த்தும். ஒரு இந்திரியம் உணர்த்தும் விடயத்தை மற்றோரிந்திரியம் உணர்த்தாது. ஆதலால் உயிரைமயக்கி விடயக்காட்சி யொன்றையேதரும் ஐம்பொறிகளால் ஆன்மாவினியல்பு விளங்கமாட்டாது. முதல்வனே குருவடிவங்கொண்டெழுந்தருளி உணர்த்துவன்.

5-வது—இயைபு.

## உதாரண வெண்பா.

பன்னிறங் காட்டும் படிகம்போ லிந்திரியந்
தன்னிறமே காட்டுந் தகைநினைந்து—பன்னிறத்துப்
பொய்ப்புலனை வேறுணர்ந்து பொய்பொய்யா மெய்கண்டான்
மெய்ப்பொருட்குத் தைவமாம் வேறு.

(இ-ள்.) பல் நிறம் காட்டும் படிகம்போல் இந்திரியம் தன் நிறமே காட்டும் தகை நினைந்து = (தன்னைச்சார்ந்த) பலவேறு வகைப்பட்ட வன்னங்களையே தன்னிடத்துக்காட்டும் இயல்புடைய படிகம்போல், (ஆன்மா தன்னைச்சார்ந்த) இந்திரியங்களினியல்பையே தன்னிடத்து விளக்குவதாகிய தனது (சார்ந்ததன் வண்ணமாயிருக்கும்) தன்மையை முன்னர்ச் சிந்தித்துணர்ந்துகொண்டு(பின்பு)—பல்நிறத்துப் பொய்ப்புலனை வேறு உணர்ந்து = பலவேறு வகைப்பட்ட இயல்புடைய பொது வியல்பைச் செய்யும் இந்திரியங்களைத் தனக்கு வேறாகக் கண்டு—பொய் பொய்யா = அவற்றாலாகிய பொதுவியல்பு பொய்யாய் ஒழியுமாறு—மெய் கண்டான் = தனது சிறப்பியல்பை உணர்ந்தானாயின்—வேறு மெய்ப்பொருட்குத் தைவம் ஆம் =(அவன் அசத்தாகிய அப்பொறிகளுக்கு) வேறாகிய சிவபரம்பொருளுக்கு அடிமையாய், அப்பரம் பொருளினியல்பு தன்னிடத்து விளங்கச் செய்வன். அப்பொழுது முன் விளங்கிய பொது வியல்பு தனக்கு வேறாயொழியும். (எ-று.)

பொய் என்பது பொது வியல்பையும், மெய் என்பது சிறப்பியல்பையும் குறிப்பனவாம்.

தைவம் என்பது வடமொழிப் பகுபதம். இது தேவனது உடைமை என்னும் பொருளில் சிவத்துக்கு அடிமை என்றதைக் குறித்து நின்றது.

அடிமையாம் என்பது ஆன்மாவானது கருவிகளைக் கழித்த பின்னர்க்கழிக்கப்படாமல் என்றும் உடனாய் வியாபகமாய் நிற்கும் சிவத்துள் வியாப்பியமாய் அடங்கிநின்று சிவானந்தத்தை யநுபவித்தலாகிய சிறப்பியல்பை.

இவ்வெண்பாவினால் கருவிகள் உள்ளவிடத்து அக்கருவிகள் விடயத்தைக் காட்டிநிற்றலின் குருவாய் வந்துணர்த்தினும் உண்மை ஞானத்தை அறிய முடியாது. கருவிகள் நீங்கியவிடத்துக் கேவல அவத்தைவந்து கூடும் ஆதலால் தன் உண்மையாகிய உண்மை ஞானத்தை அறிவதெவ்வாறு என்னும் ஆசங்கை நீக்குதற்கு, அக் கருவிகள் உள்ளவிடத்தே அவற்றின் இயல்பைப் பொதுவியல் பென்று கண்டுகழிக்கும் உபாயத்தால் சிறப்பியல்பாகிய தன் உண்மையை யறியலாமென்று கூறி அவ்விந்திரியங்கள் காட்டிற்றைக்காட்டி நிற்றற்கு இழுக்கில்லை யென ஏதுவை வலியுறுத்திய வாறாயிற்று.

---

## நான்காம் அதிகரணம்.

விட்டன்னிய மின்மையி னரன்கழல் செலுமே.

(இ-ள்.) ஆன்மா தான் ஐம்பொறிகளின் வேறென உணர்ந்த மாத்திரமே அவற்றை விட்டு நீங்கி அன்னியமின்றி அனன்யமாந் தன்மையில் நிலைபெற்றுச் சிவபெருமான் திருவடிகளை யணையும். (எ-று.)

இதில் 1-வது—தன்னாற் கூறப்படும் பொருள்—ஆன்மா தன்னை இந்திரியங்களின் வேறென உணரவே தனக்கு ஆதாரமாகிய முதல்வனது திருவடியை யணையும்.

2-வது—ஐயப்பாடு—ஆன்மா இந்திரியங்களினின்றும் நீங்கினவிடத்து முதல்வனுக்கு அடிமையாதல் உண்டோ இல்லையோ.

3-வது—பிறர் கூறும்பக்கம்—இந்திரியங்களைத் தன்னின் வேறென அறிந்து அவ்விந்திரியங்களினாலுண்டாகிய தன் பொதுவியல்பு பொய்யாய் ஒழியுமாறு தனது சிறப்பியல்பாகிய மெய்யைக்கண்ட ஆன்மாவினுக்கு அவ்வாறு காண்டலே போதும். இந்திரியங்களாகிய கருவிகள் நீங்கினவிடத்து ஒரு செயலும் செய்ய முடியாது. ஆதலால் அந்நிலையில் முதல்வனுக்கு அடிமையாதல் கூடாது. (இவ்வாறு கூறுவோர் பேதவாத சைவர் முதலாயினோர்.)

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சைவம்

---

இது

சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம்

எனப் பெயரிய

## சைவ மஹா சபையின்

மாதாந்தப் பத்திரிகை.

---

## 1919ஆ

## ஐந்தாவது மலர்.

---

இது

திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் மடாலயம்

ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகளுக்குச்

சமர்ப்பிக்கப்பெற்றது.

---

பத்திரிகாசிரியர்.

இருக்கம் ஆதிமூலமுதலியார்.

(Retired Accountant, Military Accts., Department.)

நெ. 43, பாளையப்பன் வீதி, எழுகிணறு, சென்னை.

---

சென்னை

வைதிக சைவ அச்சுக்கூடம்.

நெ. 292, தங்கசாலைவீதி சென்னை.

1919

விலை ரூபா 1.

(தபாற்செலவு உட்பட).

சிவமயம்.

# அட்டவணை.

| உள்ளுறை. | பக்கம். |
|---|---|
| அர்ச்சாதீபம் | 4-36-56-103-158-190 |
| அரதத்தாசாரிய சுவாமிகள் சரித்திரம் | 45-58-98-155-198 |
| அறுவகை யுபசாரம் | 118 |
| ஆசாரியர் மகிமை | 128 |
| ஆஸ்திக நாஸ்திக சம்வாதம் | 90 |
| இசைவாதுவென்ற சரித்திரம் (திருவிளையாடற் புராணம்) | 18 |
| உருத்திராக்கதாரண துவேஷமத கண்டனம் | 152 |
| கோபப்பிரசாதம் | 166-193-209 |
| சந்தாதாரர்களுக்கு விண்ணப்பம் | 70 |
| சிவஞானபோதம் | 13-28-50-74-162-184-202 |
| சிவஞானபோத உற்பத்தி | 137 |
| சிவலிங்மாலிய மான்மியம் | 122 |
| சிவாசாரியர்கள் | 119 |
| சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம் | 77-80 |
| சைவ சமய பரிபாலனம் | 134 |
| சைவாசார போதம் | 16 |
| சோமசுந்தர நாயகர் சரித்திரச் சுருக்கம் | 8 |
| ஞானனந்தர் சம்பாஷணை | 110 |
| தாயுமான சுவாமிகள் பாடல் (முதற் செய்யுள் விருத்தியுரை) | 170 |
| திருமுறைப் பெருமை | 41 |
| திருவாதிரை மகோற்சவப் பிரபாவம் | 32 |
| தோத்திரம்— | |
| சிவகாமியம்மையார் | 25 |
| சுந்தரமூர்த்தி நாயனர் | 49 |
| பரமாசாரியர் | 121 |
| மாணிக்கவாசக சுவாமிகள் | 97 |
| முருகக் கடவுள் | 73 |
| விநாயகக் கடவுள் | 1-169-201 |
| பரமாசாரியர் | 121 |
| மாசபௌர்ணை பூஜாவிதி | 114 |
| மெய்யன்பரொருவர் திருப்பணி | 23 |
| வைதிக சைவர்கள் அநேகசுர வாதிகளா | 65 |

4-வது—மறுத்துரைக்குஞ் சித்தாந்தத் துணிபு—

ஒருவன் ஏறியிருந்து ஆடுதற்கு ஆதாரமான ஊசல் கயிறற்றதாயின் அவனுக்குத் தாரகமாவது தரையேயன்றி வேறில்லை. அதுபோல் ஆன்மா தன்னை இந்திரியத்தின் வேறாகக்காணின் அதற்குத் தாரகமாய் நிற்பது முதல்வன் சீபாதமேயாம். அன்றியும், ஆன்மா அறிவாயும் வியாபகமாயும் உள்ள தனது சிறப்பியல்பை யறிந்து தான் இந்திரியத்தின் வேறெனஉணர்ந்தபிறகு தன்னின் வேறெனக் கழித்த இந்திரியத்தால் ஆவதொன்றுமில்லை. ஆதலால் குருவினால் தன்னை இந்திரியங்களின் வேறென உணர்ந்த அக்காரணத்தினாலேயே தனக்கு ஆதாரமாகிய முதல்வனது திருவடியை அணையும். ஆன்மா இந்திரியங்களின் நீங்குதலாவது அவற்றைத் தன்னின் வேறெனக்கண்டு பற்றற்றிருத்தலாம்.

5-வது.—இயைபு.—

## உதாரண வெண்பா.

சிறைசெய்ய நின்ற செழும்புனலி னுள்ளஞ்
சிறைசெய் புலனுணர்விற் றீர்ந்து—சிறைவிட்
டலைகடலிற் சென்றடங்கு மாறுபோன் மீளா
துலைவிலரன் பாதத்தை யுற்று.

(இ-ள்.) சிறைசெய்ய நின்ற செழும் புனலின் உள்ளம்=ஒருவன் அணையை உயர்த்துக் கட்டித் தடைசெய்ய ஆண்டுத் தடையுண்டு தேங்கிநின்ற ஆற்றுநீர்போல (கருவிகளாலாய பாசஞானம் தனது வியாபகத்தைத் தடைசெய்ய அதனிடத்தில் ஏகதேசமாய் அடங்கித் தடையுண்டு நின்ற) உயிர்—சிறைவிட்டு அலைகடலில் சென்று அடங்கும் ஆறுபோல்=அவ்வணைமுறிந்து தடை நீங்கிய விடத்து இடையீடின்றிக் கடலின்கண் விரைந்துசென்று அந்நீரேயாய் அதனுள் அடங்கி மறித்து வாராத ஆற்றுநீர்போல—சிறைசெய் புலனுணர்வில் தீர்ந்து=கருவிகளாலாய பாசஞானத் தடையினின்று நீங்கியபோது-உலைவு இல் அரன் பாதத்தை உற்றுமீளாது=தனக்குக் கேடில்லாத சிவபிரானது திருவடியைத் தலைக்கூடி அத்திருவடி நிறைவேயாய் அதன்கண் அடங்கிப் பின்பு மீளுதல் செய்யாது. (எ-று.)

புனலின்=புனலைப்போல.

மலசத்திக்குக் கேடு இயல்பாயிருத்தலினால் கேவலப்பட்ட உயிர் (அதாவது சகலாவத்தையிலிருந்து கேவலாவத்தையை யடைந்த உயிர்) கருவிகளின் மீளுதலும் கூடும் (அதாவது மீண்டும் சகலாவத்தையை யடைதலுங் கூடும்). சிவசத்திக்கு எக்காலத்தும் கேடில்லாமையால் சகலாவத்தையினின்றும் நீங்கிச் சுத்தாவத்தையை யடைந்த உயிர் (அதாவது சிவன் சீபாதத்தை யணைந்த உயிர்) அதுபோல் மீள்வதற்கு (அதாவது மீண்டுஞ் சகலாவத்தையை யடைவதற்கு) ஏதுவில்லை யென்பார் உலேவிலரன் என விசேடித்தார்.

இவ்வெண்பாவினால் கருவிகளினின்றும் நீங்கி மலம் தாரகமாக கேவலாவத்தையை யடையும் உயிர் மீளவும் கருவிகளைக்கூடிச் சகலாவத்தையை யடையுமாறுபோல, கருவிகள் நீங்கிச் சிவம் தாரகமாய்ச் சுத்தாவத்தையை யடைந்த உயிரும் மீண்டும் கருவிகளைக்கூடிச் சகலாவத்தையை யடையும்போலும் என்னும் ஆசங்கையை உவமை முகத்தால் நீக்கியவாறும்.

எவ்வுருவுந் தானென்னி னெய்துவா ரில்லைதா
ளிவ்வுருவின் வேறே லிறையல்ல—னெவ்வுருவுங்
கண்போ லவயவங்கள் காணவக் கண்ணில்லார்
கண்பேறே காணக் கழல்.

(இ-ள்.) எவ்வுருவும் தான் என்னின் தாள் எய்துவார் இல்லை = உயிருணர்வேயன்றிப் புலனுணர்வும் சிவமேயாயின் (புலனுணர்வைக்காட்டிலும் உயிருணர்விற்கு விசேடமில்லாமையால் புலன் வழியொழுகும் சகலநிலையைக் கைவிட்டுத் திருவடியை யடைய வேண்டாமையின் அத்) திருவடியை யடைபவர் ஒருவரும் இல்லை (யாய் முடிந்து "பாசத்தைப் பசுக்கள் விட்டுப் பதியினையடைய முத்தி" என்னும் வேதாகமங்கள் போலியாய் முடியும்).—இவ்வுருவின் வேறேல் இறை அல்லன் =(ஆதலால் முதல்வன் கருவிகளின் அறிவோடு கலவாமல்) அவற்றின் வேறாய் நிற்பன் எனில், (அக் கருவிகளின் அறிவிற்கு முதல்வனா லாகவேண்டிய உபகாரம் ஒன்று மில்லை யெனப்பட்டு அவற்றிற்கு) இறைவனல்லன் (என்றாகி அவன் முதன்மைக்கு இழுக்காய் முடியும்).— (இவ்வாறாயின் அதனியல்பு தான் யாதோ எனின்)—எவ்வுருவும் = உயிருணர்வுபோலப் புலனுணர்வும் (கலப்பினாற் சிவமேயாயினும் இரண்டும் தம்முள் ஒப்பன வல்ல)—அவயவங்கள் கண்போல் காண =(உயிரானது மெய் வாய்

கண் மூக்குச் செவி யென்னும் ஐம்பொறிகளினும் ஒப்பக்கலந்து நிற்பினும், கண் இந்திரியம் நீங்க மற்றநான்கும் நின்றவிடத்தி லிருந்தே தம்மிடத்து வந்த தத்தம் விடயத்தையே யறியும். தூரத்தி லுள்ள விடயத்தை உயிரின் அறிவோடு கலந்து சென்று அறியா. கண்ணிந்திரியமோ வெனில், ஒளியால் ஆன்மபோதத்தோடு கலந்து தூரத்திலுள்ள விடயத்தையும் வியாபித்தறியும். ஆதலால் மற்ற நான்கு அவயவங்கள் கண்போல் அறியமாட்டா—அக்கழல்=அக் கண்ணினது வெற்றிப் பாட்டை (அதாவது ஏனை இந்திரியங்களைப் போலன்றி கண்ணிந்திரியம் ஆன்மபோதத்தோடு கலந்து தூரத்தி லுள்ள விடயத்தையும் வியாபித்தறிதலாகிய மேம்பாட்டினை)— அக்கண் இல்லார் கண்பேறேகாண் = கண்ணொளியிழந்தாரது கண் பேற்றிற்கண்டு அறிவாயாக (அதாவது அவ்வொளி யிழந்தவர் மாசுநீங்கிக் கண்பெற்ற விடத்துத் தூரத்திலுள்ள பொருளை அறிவ தனாலறிந்து கொள்க). (அவ்வாறே முதல்வன் உயிருணர்வினும் புலனுணர்வினும் ஒப்பக்கலந்து நிற்பினும் புலனுணர்வு உயிரு ணர்வுபோல வியாபக விளக்கமாதலின்றி ஏகதேச விளக்கமாம். உயிருணர்விற்குளதாகிய அம்மேம்பாடானது அவ்வியாபக உண ர்வை யிழந்த பசுத்துவமுடையாரிடத்தில் அறியப்படாதாயினும், அவரது பசுத்துவம் நீங்கிய சிவப்பேற்றின்கண் அறியப்படும்.) (எ-று.)

கண்ணும் அவயவங்களும் இந்திரியங்களை யுணர்த்தும் ஆகு பெயர்-கண்பேறே=கண்பேற்றிலே (அதாவது கண் பெறுத லிலே). கழல் என்பது வெற்றியைக்காட்டும் காலணி மணிவடம். கண்ணுக்கு வெற்றியாவது நான்கு இந்திரியங்களையும் நோக்கி மேம்படுதல்.

இவ்வெண்பாவால் ஆன்மா பசுத்துவம் நீங்கிச் சிவத்துவம் பெற்ற விடத்துப் பசுகரணமுஞ் சிவகரணமாவதனால் ஐம்பொறி யின் மீளினும் இழுக்கில்லையாதலால் மேலைவெண்பாவில் ஆன்மா கருவிகளின் மீளாதெனக்கூறியது எற்றுக்கு என்னும் சங்கிராந்த வாத சைவரை மறுத்து மீளாமையை வலியுறுத்தியவாறும்.

ஐம்பொறியி னல்லையெனு மந்த தரசிவனை
யைம்பொறியை விட்டங் கணைசகல—னைம்பொறியி
னீங்கானீர்ப் பாசிபோ னீங்குமல கன்மம்வரி
னீங்கானை நீங்கு நினைந்து.

(இ-ள்.) ஐம்பொறியின் அல்லே யெனும் அந்ததர=(நீ, நின்ஞல் அதிட்டிக்கப்பட்டவிடத்தும் ஏகதேசவறிவைச் செய்வனவாகிய) ஐம்பொறிகள் போலல்லே, (அவற்றின்மேம்பட்டு வியாபகமாயறியும் வெற்றிப்பாடுடைமை) என (மேலேவெண்பாவால்) உணர்த்தப்படும் தீவிரதரத்திற் றீவிரதரமான சத்திநிபாத முடையோனே—சிவனே ஐம்பொறியை விட்டு அங்கு அணே=(அவ்வியல்பினவாகிய) ஐம்பொறிகளைக் கைவிட்டே சிவன் திருவடியையடைந்து, முன் அவ்வைம்பொறியினின்றதுபோல் அதுவாய் உறைத்து நிற்பாயாக.—(அவ்வாறணேந்து நின்ருயாயின்) சகலன் ஐம்பொறியின் நீங்கான்=சகலனே ஐம்பொறிவிட்டு நீங்காதவாறுபோல அச்சிவன் உன்னே விட்டு நீங்கான்.—நீர்ப்பாசிபோல் நீங்கும் மலகன்மம் வரின்=(கல்லெறிந்த விடத்து நீங்கி, விட்டவிடத்துப்பரக்கும்)நீரின் கட்பாசிபோல, (நீ அவ்வாறுறைத்து நிற்றலினுல்) நீங்குவனவாகிய மலகன்ம மாயைகள் (உலகப்பயிற்சி வயத்தால் நிகழும் அயர்ச்சி பற்றி) வந்து கூடுமாயின்—நீங்கானே நினேந்து நீங்கு=(நின்னிலேகுலேயினும் நின்னேவிட்டு) நீங்காத அம்முதல்வனே உணருமாறு முன்னர்க்கூறப்படும் உபாயத்தினின்று சாதித்து அவற்றை நீங்கிக் கொள்க. (எ-று.)

விட்டன்றி அணேதல் கூடாதென்பார் விட்டு அணே யென்றும், ஐம்பொறியை விட்டு நீங்கிய விடத்துச் சிவன் மீளாமையை வலியுறுத்துவார் சகலனேம்பொறியினீங்கான் என்றும், ஒருக்கால் மீளுமாயின் அதற்குக்காரணம் இஃதென உவமை முகத்தால் உணர்த்துவார் நீர்ப்பாசிபோல் என்றும், ஐம் பொறியின் மீளுமாயின் அவற்றிற்கு மூலமாகிய மலகன்ம மாயைகளும் அது பற்ருகவந்து கூடும் என்பார் மலகன்மம் வரின் என்றும், அம்மீட்சியை நீக்குதற்கு உபாயங் கூறுவார் நீங்கானே நினேந்து நீங்கு என்றுங் கூறினுர். இன் இரண்டும் உவம உருபுகள். அந்தம் என்றது நான்காஞ் சத்திநிபாதத்தை. அதுவும் நால்வகைப்படுமாகலின் அவற்றுள்ளும் மேம்பட்ட சத்திநிபாதமுடையாய் என்பார் அந்ததர என்ருர். சகலனே என்னும் இரண்டனுருபு விகாரத்தாற் ருெக்கது. மலகன்மம்எனவே இனம்பற்றி மாயையுங் கொள்ளப் படும்.

இவ்வெண்பாவினுல் ஆற்றுநீரானது கடலிற்சென்று அடங்குவது மாத்திரமன்றி அவ்வாற்றின்வழியாக அதினின்று மீளுத

லுங்கூடும். அவ்வாறே சிவன் திருவடியை யடைந்த உயிர் அத் திருவடியில் அடங்கியிருந்தலேயன்றி ஒரு சமயத்தில் இந்திரியத் தில் மீளுதலுங் கூடும். ஆதலால் அது ஒருபோதும் மீளாதென் பது பொருந்தாது என்று கூறும் சிவாத்துவித சைவரை மறுத்து அவ்வாறு மீளுதற்குக் காரணம் பழையவாசனையென்றும், அப் பழைய வாசனையால் மீளவரின், ஆற்றுநீர் ஆற்றுநீராகவே திரும் பாது கடல்நீராகத்திரும்பி, மீண்டும் அக்கடலிற்சென்று அடங்கு மாறுபோல, திருவடியை மறவாத உபாயத்தால் அக்கருவிகளை விட்டு மீண்டும் திருவடியை யடைந்து அதில் அடங்கும் என்று கூறிமீளாமையை வலியுறுத்தியவாறும்.

---

கணபதி துணை.

# கோபப்பிரசாத உரை.

(197-வது பக்கத்தொடர்ச்சி.)

26. சீர்மலி சிலந்திக்கு இன் அரசு அளித்தும் எ-து.—ஞானம் நிறைந்த சிலந்திப்பூச்சிக்கு இனிய கோச்செங்கட் சோழனுகும் அரசுரிமையைக் கொடுத்தருளியும் எ-ம்.

27. கார்மலி உருவக் கருடனைக் காய்ந்தும். எ-து.—மேகவண் ணன் விளங்கும் அழகிய கருடனைக்கோபித்துத் தண்டித்தும் எ-ம்.

28. ஆலின்கீழ் இருந்து அறநெறி அருளியும் எ-து.—வட வால விருக்ஷத்தின்கிழே வீற்றிருந்து சிவஞானத்தைப் போதித் தருளியும் எ-ம்.

29. கூறுங்காலை இன்னவை பிறவும் எங்கள் ஈசன் கோபப் பிரசாதம் எ-து.—ஆராய்ந்துசொல்லுமிடத்து இவையும் இவை போல்வனபிறவுமாகச் செய்தருளியவெல்லாம் எமது தலைவராகிய சிவபிரானாது தண்டமும் அநுக்கிரகமுமாம் எ-ம்.

30. கடிமலர் இருந்தோன் கார்க்கடல் கிடந்தோன் புடம் உறுசோலைப் பொன் நகர்காப்போன் உரைப்போர் எ-து.—மணந் தங்கும் மலர்மிசையிருந்தோனாகிய பிரமதேவனையும், மேகங்கள்

பருகும் பாற்கடற்கண்ணே படுக்கையிற் கிடந்தோனாகிய திருநெடுமாலையும், இலைப்பொறையான் வளைந்த கற்பகச்சோலை நீழலிலிருந்து தேவலோகத்தைக் காப்பவனாகிய இந்திரனையும், தனித்தனியே முதல் என்பாரும், எம்பிரானோடும் எண்ணிச்சமத்துவமுடைய ரென்பாரும், மற்றும் பலபிதற்றுவோரும் எ-ம்.

31. ஆகிலும் எ-து.—மதத்தின ரெனப்படுவரானாலும் எ-ம்.

32. ஒண்கடல் மாநீர் அங்கைகொண்டு இறைக்கும் ஆதன் போன்றுளர் எ-து.—இவரெல்லாம் ஒள்ளிய கடற்பெருநீரை உள்ளங்கையைக்கொண்டு இறைத்திடர்ப்படும் அறிவற்ற குருடனைப் போன்றவ ராவார் எ-ம்.

33. ஒடுங்காப்பெருமை உம்பர்கோனை அடங்கா ஐம்புலத்து அறிவு இல் சிந்தைக் கிருமி நாவால் கிளத்தும் பரமே எ-து. அளவைகளானும் வேதமாகிய முதனூலினாலும் அளந்தறிய அடங்காத பெருமையினையுடைய மகாதேவனைத் தம்வயப்படாத ஐந்திந்திரியங்களானும் சடமாகிய மனசினாலும் புழுத்தநாவினாலும் அங்ஙனம் சமத்துவமுடையரெனச் சொல்லுந்தன்மைத்தோ. எ-ம்.

34. அதாஅ அன்று எ-து. அதுவன்றியும் எ-ம். இதுகாறும் புராணவசனம்பற்றிக்கூறி மேல் வேதவசனம்பற்றிக் கூறுகின்றார்.

35. ஒருவகைத் தேவரும் எ-து—தொகுதியான் ஒருவகைப்பட்டதேவரும் எ-ம்.

36. இருவகைத் திறமும் எ-து.—ஆண் பெண் என்னும் இருவகையாற் பலதிறமும் எ-ம்.

37. மூவகைக்குணமும் எ-து—சத்துவ ராசத தாமத மென்னும் மூவகைக்குணமும் எ-ம்.

38. நால்வகை வேதமும் எ-து—இருக்கு யசுர் சாமம் அதர்வம் என்னும் நான்குவகை வேதமும் எ-ம்.

39. ஐவகைப் பூதமும் எ-து—பிருதுவி அப்புத் தேயு வாயு ஆகாயம் என்னும் ஐந்துவகைத்தாய பூதமும் எ-ம்.

40. அறுவகை இரதமும் எ-து—இனித்தல் புளித்தல் கார்த்தல் கைத்தல் உவர்த்தல் துவர்த்தல் என்னும் ஆறுவகை இரதமும் எ-ம்.

41. எழுவகை ஓசையும் எ-து— ச. ரி. க. ம. ப. த. நி. என்னும் எழுவகையான ஓசையும் எ-ம்.

42. எண்வகை ஞானமும் எ-து—மெய்வாய் கண்மூக்குசெவி என்னும் ஐந்து ஞானேந்திரியமும், அசங்காரம் சித்தம் புத்தி என்னும் மூன்றுகரணமுமாகிய எட்டுவகை ஞானமும் எ-ம்.

43. ஒன்பதின் வகையும் ஒண்மலர்ச் சிறப்பும் எ-து—பிரகிருதியின் வகையும், அவ்வகைகளிற் பரிணமித்து விரிந்த தாத்துவிக வகைச் சிறப்பும் எ-ம். ஒன்பது என்றது ஈண்டுப் பிரகிருதியை.

44. பத்தின் வகையும் ஆகிய பரமனை எ-து—அவையனைத்தையும் போக்கியமாகக்கொள்ளும் புருடன்வகையுமாகிய பரமசிவனை எ-ம். பத்து என்றது ஈண்டுப் புருடனை அகரஉயிர் ஏனையுயிரையும் மெய்யையும் இயக்கற்கண் அவையேயானவாறு இவை பலவுந்தாமேயான பரமசிவனை என்றுணர்க. எண்கள் குறிப்புச் சொற்களின் பாலன. இதுகாறும் வேதவசனம் பற்றிக்கூறி மேற்சிவாகம வசனம் பற்றிக்கூறுகின்றார்.

45. நினைவோர்க்கு இன்பனை எ-து—நின்றாலும் இருந்தாலும் கிடந்தாலும் நடந்தாலும் மென்றாலும் துயின்றாலும் விழித்தாலும் இமைத்தாலும் மன்றுடும் மலர்ப்பாதம் மறவாதே நினைக்கும் சகசநிட்டைத்தொண்டருக்கு இன்பமேயாயிருப்பவரை எ-ம்.

46. என்னிடை அமுதினை எ-து—அங்ஙனமே அநுபவிக்கும் என்னிடத்தும் அமிர்தமாகத் தித்திப்பவரை எ-ம்.

47. செம்பொனை மணியினை எ-து—அத்தகைய சுவாநுபவத்திலே செம்பொன்னையும் மணியையும் போலக் களங்கமற விளங்குபவரை எ-ம்.

48. தேனினைப் பாலினை எ-து—தேனையும் பாலையும் போலச் சுவைப்பவரை எ-ம்.

49. தஞ்சம் என்று ஒழுகும் தன் அடியார்தம் நெஞ்சம்பிரியா நிமலனை எ-து—நின்னலாற் பற்று மற்றொன்றிலோம் நீயேதஞ்சமென்று சரியையாதி நாற்பாதவகையினின்று ஒழுகும் தமது மெய்யடியார்களது நெஞ்சத்தை விட்டகலாத நின்மலரை எ-ம்.

50. நீடு உயர் செந்தழல் பவளச்சேண் உறு வரையனை எ-து. மிக்கோங்கிய செந்தழன்மலைபோலவும் பவளமலைபோலவும் அடி

பொடிகள் பூசிப் பாடுந்தொண்டர் புடைசூழ
அடிக ளாரூராதிரைநாளா லது வண்ணம்.

சிவபெருமானைப் பற்றிக் கூறும் சரித்திரங்களுக்குப் புராணங்கள் என்று பேர். திருத்தொண்டர் செய்கைகளைக்கூறும் சரித்திரத்திற்குப் பெரியபுராணம் என்று பேர். இது பற்றியன்றே "உமையோ இறைவர் பாகத் தொடுக்கம், இறைவரோ தொண்டருள்ளத் தொடுக்கம், தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே" என்று பெரியார் கூறினர்.

சிவபெருமான் உலகெலாம் என்று அடியெடுத்துக் கொடுக்க அருள்வசப்பட்டிருந்து திருத்தொண்டர்சீர் பரவிய சேக்கிழார் பெருமானே,

தெரிவரும் பெருமைத் திருத்தொண்டர் தம்
பொருவருஞ் சீர்புகல லுற்றேன் முற்றப்
பெருகு தண்கட லூற்றுண் பெருநசை
யொரு சுணங்கனை யொக்குந் தகைமையேன்

என்று அருளிச் செய்தா ரெனில் மருள் வசப்பட்டு முத்தி... யறியாத மூர்க்கனாகிய ஏழையேனால் திருத்தொண்டர் பெரு... களையெல்லாம் எங்ஙனம் எடுத்துச் சொல்ல இயலும்.

சைவ சமயிகளுக்குச் சிவாலயங்கள் எப்படி அவசிய... அப்படியே சிவனடியார் திருக்கூட்டங்களும் அவசியமென்ப... சிந்தித்தே யாம் சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தை... 24 வருடங்களாக நடத்துவிக்கின்றோம். சமய குரவர் ம... யைப் பின்பற்றி தெய்வீகமான சிவதல யாத்திரைகள் பல... தோம். தலங்கடோறும் மகாபிடேகாதி யுபசாரங்களும் உழ... திருப்பணி தேவார பாராயணம் சைவப் பிரசங்கம் மாகேசுர பூசை முதலியன நடத்தினோம். சைவ பாடசாலை வைத்துச் சிறுவர்களைப் பழக்கிச் சைவ நெறியைப் பாதுகாக்கச் செய்கிறோம். சைவம் எனப் பெயரிய இப்பத்திரிகையை வெளியிட்டு உலகத்தில் அஞ்ஞான விருளை நீக்கி மெய்ஞ்ஞான வொளியைப் பரப்புகின்றோம். யாம் இவ்வளவு அரிய காரியங்களைத் திருவருளையே துணையாகக் கொண்டு பல வருடங்களாகச் செய்துவருவதனால் இத்திருக்கூட்டத்திலிருந்து சைவ நன்னெறியைப் பாதுகாப்பது தங்களைச் சைவர் என்று எண்ணிக்கொள்ளும் ஒவ்வொருவருக்கு கடமையாம்.

59. வேயார் தோளி மெல் இயல் கூறனை எ-து.—அங்ஙனம் அரன் உருத்திரனாகிச் சங்கரிப்பவரேனும் மீட்டுந் தோற்றுவிக்கும் மூங்கிலையொத்த தோளினையுடைய மெல்லிய வியல்பினையுடைய கருணாசத்தியைப் பாகமாகவுடையவரை எ-ம்.

60. தாயாய் மன்உயிர் தாங்கும் தந்தையை-எ-து. அதற்கேற்பத் தாயாகி எவ்வுயிரையுங் காக்கும் பரம பிதாவானவரை. எ-ம்.

61. சொல்லும் பொருளும் ஆகிய சோதியை எ-து—அதனானே சொல்லும் பொருளும் போல அந்தச் சத்தியுந்தாமும் பேதாபேதமாகி விளங்குபவரை எ-ம்.

62. கல்லும் கடலும்ஆகி அகண்டனை எ-து—அந்தச்சத்தியானே அவ்வுயிர்கள் போகந்துய்க்குமாறு மலையும் (நிலனும்) கடலுமாகி மறைத்து வியாபிக்கின்றவரை எ-ம்.—

63. தோற்றம் நிலை ஈறு ஆகிய தொன்மையை எ-து—இங்ஙனமே சிருட்டி திதி சங்காரம் திரோதானம் அநுக்கிரகமாகிய அநாதி ஐந்தொழிலுமுடையவரை எ-ம்.

64. நீற்றிடைத்திகழும் நித்தனை எ-து—அவ்வைந்தொழிலுமுடைமையானே விகாரியாகாது சராசரமனைத்தையும் தம்மிடத்தொடுக்கிய விபூதியிடத்தே விளங்கும் அநாதிநித்தியரை எ-ம்.

65. முத்தனை எ-து—அங்ஙனமாயினும் அவற்றின் விருப்பு வெறுப்பற்ற அநாதி மலமுத்தரை எ-ம்.

66. வாக்கும் மனமும் இறந்த மறையனை எ-து—அதனானே பாசஞான பசுஞானங்களைக் கடந்த அநாதி போதராயுள்ளவரை எ-ம். மறை ஈண் டறிவின்மேற்று

67. பூக்கமழ் சடையனை எ-து—அவ்விருஞானத்தானும் அறியவாராராயினும் சிவஞானத்தானே யறியும்படி மலர்மணங்கமழும் சடைமுடியாகிய அளவிலாற்றலுடையவரை எ-ம்.

68. புண்ணியநாதனை எ-து—இக்குணமெலாமுணர்ந்து வழிபடும் புண்ணியத்திற்குப் பயனாகவுள்ள தலைவரை எ-ம்.

69. இனைய தன்மையன் என்று அறிவரியவன்தனை எ-து—அங்ஙனம் வழிபடுவதேயன்றி இப்படியன் இவ்வண்ணத்தன் இவ்

ணிறைவன் என்றெழுதிக்காட்ட முடியாமையின் அறிதற்கரிய வரை எ-ம்.

70. முன் விட்டுத் தாம் மற்று நினைப்போர் எ-து—இங்ஙனம் முறையே புராணம் வேதம் ஆகமங்கள் தெரிக்கவும் அச்சிவ முதலையே முதலாகக் கொள்ளுதலைவிட்டுத் தாங்களாகப் பிறி தொன்றனை முதலாக உன்னுந் தீயூழாளர் எ-ம்.

71. மாமுயல் விட்டுக்காக்கை பின்போம் கலவர்போலவும் எ-து— பெருமுயலைப்பற்றுதுவிட்டுக் காக்கையைப் பற்றும்படி பின்றொடர்ந்து செல்லும் வேட்டுவ வீரர் போலவும் எ-ம்.

72. விளக்கு அங்கிருப்ப மின்மினி கவரும் அரும் அளப்பு சிறப்பு இல் ஆதர் போலவும். எ-து.—வாடா விளக்குத் தமதில் லின் கண்ணே இருக்கவும் பிரகாசத்தை விரும்பி மின்மினியைப் பிடித்து வரும் அரிய அளவைச் சிறப்பாகிய அறிவுக் கண்ணில் லாத குருடரைப் போலவும் எ-ம்.—இவ்விரண் டுவமைகளும் முறையே உடையானல்லானை யுடையானாகக் கோடற்கும் உட ங்கே சிவஞான மிருந்துணர்த்துவ துணராது பசுஞானத்தையே தேடுதற்குவமையாயின.

73. கச்சம் கொண்டு கடுந்தொழின் முடியாக் கொச்சைத் தேவரைத் தேவர் என்று எண்ணி எ-து.—துணிவுகொண்டு அரிய தொரு கோபத்தையேனும் பிரசாதத்தை யேனும் செய்ய முடி யாத கீழ்மையினையுடைய வனைத்தேவர்களை முதற் கடவுளராகக் கருதி எ-ம்.

74. பிச்சரைப் போல ஓர் ஆரியப் புத்தகப் பேய்கொண்டு புலம்புற்று எ-து.—அக்கருத்தை நிரப்புமாறு பித்தேறினோர்கள் உழறுவதுபோல உயர்வாகியதொரு வேதத்தின் உட்பொருளை அறியாது பேய்போல ஆவேசங்கொண்டு பிதற்றிப் பிதற்றி எ-ம். பித்தேறினோர்கள் முன்னொடுபின் முரணிக்கூறற்கும்; பேய் இருக்கு யசுர் சாமம் அதர்வம் என்னும் நாற்பகுப்பில் இருக்கின் பிரி வாய இருபத்தொருசாகையினும் எசுரின் பிரிவாய நூற்றொரு சாகையினும் சாமத்தின் பிரிவாய ஆயிரஞ் சாகையினும் அதர் வத்தின் பிரிவாய ஒன்பது சாகையினும் தாம் தாம் பற்றியதையே மலைந்து பொருள்கொண்டு நிற்றற்கும் உவமைபாயின.

75. வட்டணை பேசுவர் எ-து.—தருக்கவுணர்வு கைவந்தவர் போல வளைய வளையச் சுட்க தர்க்கம் பேசுவர் எ-ம்.

76. மானுடம் போன்று பெட்டினை உரைப்போர் எ-து—. அறிவின் மதுகையின்மையானே கிலுகிலுத்த மரம்பழுத்த மானுடப்பழம்போலும் மனிதராய்த் தமது விருப்பத்தையே இங்ஙனம் பேசித்திரியுமிவர் எ-ம்.

77 பேதையர் எ-து—அறிவறைபோய ஏழையராவார் எ-ம்.

78. நிலத்து உன்தலை மீன்தலை எண்பலம் என்றால் அதனை அறுத்து நிறுப்போர் ஒருத்தர் இன்மையின் மத்திரம் ஆகுவர் எ-து. இத்தரையின் கண்ணே ஒருவன் மற்றொருவனைப் பார்த்து உனது தலை மீனினது தலையாயிருக்கின்றது நிறையும் எட்டுப்பலமுளதென்றால் அங்ஙனமே அதனை அறுத்து நிறை செய்வோர் ஒருவருமின்மையானே அவ்வளவிற்றமக்கே மீன்றலை வாய்த்ததென மகிழாநிற்பர் எ-ம். இது கருதப்பட்ட பொருளை மறைத்து அதனைப் புலப்படுத்தும் அதுபோன்ற பிறிதொன்றினைக் கூறியதனனே ஒட்டென்னும் அணி. கருதப்பட்ட பொருள் இத்தரையின் கண்ணே போலி ஆசானொருவன் அப்பேதையர் தம்மைப் பார்த்து உனது ஞானம் பிரமத்தினது ஞானமாயிருக்கின்றது அது சச்சிதானந்தமா மென்றால் அங்ஙனமே அதனை அறிந்து சொல்வோர் பிறர் ஒருவருமின்மையானே அவ்வளவிற்றமக்கே பிரமத்தன்மை வாய்த்ததென மகிழாநிற்பர் எ-ம்.

79. மாநெறி கிடப்ப ஓர் சித்திரம் பேசுவர் எ-து—அம்மட்டோ! இன்னும் அவர் சத்தியவாதமாம் சைவத்திருநெறியொன்றிருக்கவும் 'மெய்போலப் பொய்வாதத்தையும் புகலாநிற்பர் எ-ம்.

80. தேவராகில் இன்னோர்க் காய்ந்தனர் இன்னோர்க்கு அருளினர் என்று அறிய உலகின் முன்னே உரைப்பது இல்லை எ-து—அவர் தாம்கொண்ட தேவரும் முதற்றேவராமாயின், அத்தேவர் இன்னரைத் தண்டித்தார் இன்னருக்கு அநுக்கிரகித்தார் என்று எல்லாரும் அறியும்படி உலகத்தின் முன்னிலையில் எடுத்துச் சொல்வதுமேஇல்லை எ-ம்.

81. ஆகிலும் எ-து—அங்ஙனமாயினும் நீற்றொடு சாதனம் பூண்டவராய் எ-ம்.

82. ஆடுபோலக் கூடிநின்று அழைத்தும் எ-து— ஆடுகள் கத்துவதுபோலக் கூட்டங்கூடி நின்று திருவுருத்திரத்தைக் கொண்டு மேமே என்று அழைத்தும் எ-ம். மேமே எனச் சமகத்தின் வருவதறிக.

83. மாக்கள் போல வேட்கை ஈடுண்டும் எ-து—அங்ஙனந் திருவுருத்திரஞ் சொல்லும் பொழுதும் மிருகங்களைப் போல ஆசை வசப்பட்டும் எ-ம்.

84. இப்படி ஞானம் அப்படி அமைத்தும் எ-து—இந்தப் பூமியிலே அவ்வுருத்திரத்தின் உணர்ச்சிப் பொருளை அவ்வண்ணமே உணரும்படி ஆலயமாக அமைத்து வைத்திருக்கவும் எ-ம்.

85. இருநிலத்து இன்ன தன்மையன் என்று முன்னே அறியா மூர்க்க மாக்களை எ-து.—அவ்வாலயங்கள் பல நிறைந்த இந்த நிலவுலகத்திலே இன்ன தன்மையன் அவ்வுருத்திர நாதனாகிய பரசிவன் என்று முன்னர்த்தானே அறிந்துகொள்ளாத மூட மனிதரை. எ-ம்.

86. இன்னே கொண்டு ஏகாக்கூற்றம் பெரிது தவறு உடைத்து பெரிது தவறு உடைத்து. எ-து.—இப்பொழுதே பாசத்தாற் கட்டிக்கொண்டு செல்லாத கூற்றமானது பெரிதும் பிழையுடைத்து பெரிதும் பிழையுடைத்து. எ-ம்.

ஈண்டு அப்பிழை நிச்சயமென்பதுணர அடுக்கி வந்தது.

கோபப்பிரசாத வுரை

முற்றிற்று.

மெய்கண்ட தேவன் திருவடி வாழ்க.